


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (23.12.2023) தலைமைச் செயலகத்தில், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி மற்றும் அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு அமைச்சர் பெருமக்கள் அவர்களின் ஒரு மாத ஊதியமான 35 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய், திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத ஊதியமான 91 இலட்சத்து 34 ஆயிரத்து 500 ரூபாய், என மொத்தம் 1 கோடியே 27 இலட்சத்து 4 ஆயிரத்து 500 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.




மிக்ஜாம் கன மழை வெள்ள நேரத்திலும் உயிரைப் பணயம் வைத்து பணியாற்றிய பத்திரிகையாளர்கள் 400 பேருக்கு சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் அரிசி மளிகை பொருட்கள் ஆகியவற்றை மழைக்கால நிவாரணமாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியாராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.






சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் பிராட்வே டான் போஸ்கோ பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிறிஸ்துமஸ் பெருவிழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர் கள் பங்கேற்று 2200 பேருக்கு புத்தாடை அரிசி மளிகைப் பொருட்கள் கிறிஸ்துமஸ் கேக் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியாராஜன் மற்றும் பலர் உள்ளனர்.

